இளசாக, மிருதுவாக, மென்மையாக...

ஒளிநகல் சிற்றிதழ்
குருத்து 2 | ஓலை 4

# குருத்தோலை

வளருவோர்க்கும் வளர்ந்தோர்க்கும்



"உங்கள் செழிப்பில் இருந்து அல்ல,
நீங்கள் தியாகம் செய்யுமளவிற்கு அந்தப் பரிசைக் கொடுங்கள்"



# பொறுப்பாசிரியரிடமிருந்து...

மனுக்குலத்துக்குக் கடவுளின் ஒப்பற்ற பரிசாம் கிறிஸ்துவின் பெயரில் குருத்தோலை வாசகர்களுக்கு ஆசிரியர் குழுவின் சார்பில் வாழ்த்துகள்.

அன்பான ஒரே கடவுள் தான் படைத்த, நேசித்த மனுக்குலத்துக்கு ஒரு சிறந்த பரிசளிக்க விரும்பினார். தனது ஒரே மகனைப் பரிசாகக் கொடுத்தார். இதை நினைவுகூரும் விதமாகத்தான் கிறிஸ்துமஸ்ஐ முன்னிட்டு பரிசுகள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன.

இன்று கிறிஸ்துமஸ் என்றாலே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்றாகிவிட்டது. ஆனால் முதல் கிறிஸ்துமஸ் அப்படி இருக்கவில்லை. பரலோகத்தில் மாபெரும் மகிழ்ச்சி உண்டாயிருந்தது உண்மைதான். ஆனால் பூலோகத்தில் அப்படியல்ல. கிறிஸ்துவாகிய உன்னதப் பரிசை உலகில் கொடுக்க ஒரு தம்பதியரின் மாபெரும் தியாகம் கடவுளுக்குத் தேவைப்பட்டது.

கிறிஸ்து உலகில் வரவேண்டுமானால் ஒரு கன்னிப்பெண்ணின் கருவில் ஆணின் தலையீடு இல்லாமல் அற்புதவிதமாய் உருவாகி

பிறக்கவேண்டும் என்பது கடவுளின் திட்டம். அக்காலச் சூழலில் அவரை வளர்க்க அந்தப் பெண்ணால் மட்டும் முடியாது. அப்பெண்ணைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டு அவள் பெற்றெடுக்கும் குழந்தையைத் தன் குழந்தைபோல பராமரித்து வளர்க்க ஒரு ஆணும் தேவை.

இந்தக் கடினமான பணிக்குக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் மரியாளும் யோசேப்பும். இத்திட்டம் மரியாளுக்கு அறிவிக்கப்பட்டபோது முதலில் திகைத்த மரியாள் பின்னர் நான் கடவுளின் அடிமை. அவர் விரும்பியதைச் செய்யட்டும் என விட்டுக்கொடுத்து விட்டார். தனக்கு நியமிக்கப்பட்ட பெண் கர்ப்பமானார் என்பதை அறிந்த யோசேப்பு, மரியாளை அசிங்கப்படுத்தாமல் நாசூக்காக விலகிக்கொள்ள நினைத்தார். அவருக்கும் கடவுளின் திட்டம் அறிவிக்கப்பட்டபோது கர்ப்பமாயிருந்த மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டு பாதுகாத்தார்.

ஒரு சிறு கூட்டம் கிறிஸ்து பிறப்பின் அதிசயத்தைப் புரிந்திருந்தாலும் பெரும்பாலான மக்கள் அந்தக் குடும்பத்தை இளக்காரமாகவே பார்த்தனர். கடைசிவரை அந்தக் குடும்பம் கெட்டப் பெயரைச் சுமந்துகொண்டுதான் திரிந்தது.

கிறிஸ்துவின் தியாகத்துக்கு முன்னால் தங்கள் தியாகம் ஒன்றுமில்லை என்பதுதான் அந்தக் குடும்பம் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்ததற்கான அடிப்படை காரணம் என்று சொல்வோமானால் அது மிகையாகாது. தூய்மையே உருவான நீதியுள்ள கடவுள் அநீதியுள்ள இவ்வுலகத்தில் மனிதனாக அவதரிப்பது என்பது மனிதன் மலக்குளிக்குள் இறங்குவது போன்றது. கிறிஸ்துவின் பிறப்பு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திலும், கிறிஸ்துவின் சிலுவை மரணம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் பூர்த்தியடைகிறது. கிறிஸ்து என்றால் தியாகம். தியாகமே பரிசின் மேன்மை.

இதோ மீண்டும் ஒரு கிறிஸ்துமஸ் வழக்கம்போல வந்துவிட்டது. இதையும் வழக்கம்போல நாம் கடந்துபோய்விடலாம். கிறிஸ்துவுக்கென்று ஒரு சிறிய தாக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் ஒன்று செய்யுங்கள். ஒரு பரிசு கொடுக்க முடிவெடுங்கள். ஆனால் இரண்டு கட்டுப்பாடுகள்.

1. **கொஞ்சமும் இந்தப் பரிசைப் பெறத் தகுதியே இல்லை என்கிற நபருக்கு ஒரு பரிசு கொடுங்கள்.**
2. **உங்கள் செழிப்பில் இருந்து அல்ல, நீங்கள் தியாகம் செய்யுமளவிற்கு அந்தப் பரிசைக் கொடுங்கள்.**

ஏனென்றால், இந்தவிதத்தில் மட்டுமே நாம் கிறிஸ்துவைக் கொடுக்க முடியும்.

இந்த எழுத்தினால் உந்தப்பட்டு, ஒரு பரிசை நீங்கள் கொடுத்தீர்கள் என்றால், தயவுசெய்து எங்களிடம் சொல்லுங்கள். உங்கள் பெயர் வெளியிடாமல் அதைப் பிரசுரிக்கலாம்.

அன்புடன்,
ஜெஸ்டின்.

# தனிமையும் தனிப்பட்ட வாழ்வும்...

பென்னி அலெக்ஸாண்டர்

7.6 பில்லியன் மக்கள் தொகை கொண்ட இவ்வுலகம் தனிமை விரும்பிகளால் சூழப்பட்டிருப்பது, இந்த உலகம் ஒருவருக்கு ஒருவர் அளித்துக்கொண்ட அபத்தமான பரிசு! ஜன நெருக்கம் இருக்கும் அளவு இதய நெருக்கம் இல்லாமல் போனதன் விளைவு இது. தனிப்பட்ட வாழ்வையும் தனிமையையும் விரும்பிச் செயல்படுத்துபவர்களால் ஆன உலகம், அதன் விளைவாக சுயநலத்தில் திணறித் தவிக்கிறது. அதாவது 760 கோடி பேரில் பெரும்பாலானோர் ஏதோ ஒரு வகையில் தனிமை என்கிற 'உண்டாக்கிக் கொண்ட' மனபாரத்தால் தவிக்கிறார்கள். கோடிக்கணக்கான இரசிகர் கூட்டம் கொண்ட மேற்கத்திய இசைக் கலைஞர்களும், ஹாலிவுட் சினிமாக்காரர்களும்கூடத் தனிமையில் தவித்து அளவுக்கதிகமாக போதை மருந்துகளை ஏற்றிக் கொண்டு படுக்கை, குளியல் அறைகளில் 'மர்மமாக' மரித்துப்போகிறார்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் கூட்டுக் குடும்ப முறையை விட்டுவிட்ட இந்தியர்களும், தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைகளைப் பெரிதும் விரும்பி அமைத்துக்கொண்டதால் அவர்களும் இந்த வரிசையில் இணைய நேரிட்டது கலாச்சாரத் துயரமே. தன் இனம், தன் குடும்பம் என்று தொடங்கி 'தான் மட்டும்' என்னும் அளவுக்கு மெலிந்து உருக்குலைகிறது. முடிவில் தனிமை!



முன்பு தனிமை முதுமையில் வரும். இன்று எட்டாவது வகுப்பு மாணவன்கூட தனிமைக்கு ஆட்பட்டு 'ப்ளூவேல்' ஆடத் துவங்குகிறான். ஆனால், கிறிஸ்தவனுக்கும் இந்தத் தனிமைக்கும் தொடர்பு இருக்கலாகாது என்பதே வேதம் நமக்குத் தரும் சத்தியம். தேவன் நம்மைத் தனியே படைக்கவில்லை. தனிமைக்காகப் படைக்கவில்லை என்று வேதாகமத்தின் முதல் பகுதியே உறவுகளோடு தொடங்குகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபமே அநேகமாக அவரது கடைசிக் கடிதமாகும். நீரோ மன்னனின் ஆதிக்கம் அதிகரித்த கி.பி. 66 அல்லது 67ல் இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். (ஜான் கோனிபியர் மற்றும் ஜான் ஹோசன் ஆகியோர் எழுதிய 'புனித பவுலின் வாழ்வும் கடிதங்களும்' என்ற பழைய நூல் (1856) ஒன்றில் பவுல் மே அல்லது ஜீன் மாதம், கி.பி 68ல் மரித்தார் என்று குறிப்பிடுகின்றனர்.) அதற்குமுன் சிலகாலம் அப்போது அவர் சரீரத்தில் தனிமைப்பட நேரிட்டது.

கி.பி 66-68 வருடங்களில் இரண்டாம் முறை சிறைப்பட்டது முதலாம் முறையைப்போல அவருக்கு இலகுவாக அமையவில்லை. குறிப்பாகக் கடைசி சில நாட்களில் தனிமைப்படுத்தப்பட்டார். அது அவர் உண்டாக்கிக் கொண்டதல்ல. மேலும், அறிந்து வாசிப்பீர்களானால் 2 தீமோத்தேயு 4ம் அதிகாரம் ஒரு உணர்ச்சிப்பூர்வமான அதிகாரம் என்பதை அறியலாம். அப்போது நம் அன்பின் அண்ணன் ஒருவரைப் பிரியும் பாரத்தை உணர்ந்து

**"உங்கள் வாழ்வு தனிமையில் கழிவதாக நீங்கள் உணர்ந்தால், யார் நம்முடைய தனிமையை மெய்யாகவே போக்க முடியும் என்பதையும் இன்னமும் நீங்கள் அறியவில்லை என்பதே அதன் அர்த்தம்!"**

கலங்குவோம். ஒரு மாபெரும் தேவதாசனின் கடைசிக்கால மனநிலை அங்கு கண்ணீரை வரவழைக்கும். ஆனால், இங்கு மீண்டும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம்: கிறிஸ்தவனுக்குத் தனிமை என்பதே கிடையாது. மேலும் தான் ஒரு தனி நபர் இல்லை என்பதால், தனிப்பட்ட வாழ்வு (personal life) என்பதே கர்த்தருடன் இணைந்த வாழ்வுமட்டும்தான்! - என்பதை.

எனவே, கிறிஸ்தவன் தன் வாழ்வைக் குடும்ப வாழ்வு, தொழில் வாழ்வு, அந்த வாழ்வு, இந்த வாழ்வு என்றெல்லாம் கூறுபோட்டுப் பிரிப்பதுகூட அர்த்தம் இல்லாத ஒன்று. அது அநாவசியக் குழப்பதையே உருவாக்கும். அப்படிச் செய்யும் பிரிவினைகள் அவநம்பிக்கைகளால் ஆனது. தேவன் நம்மைத் தனியே ஒரு வாழ்வை அமைக்க அழைக்கவில்லை என்பதை அறியாததால் வரும் செயல் அது. உங்கள் வாழ்வு தனிமையில் கழிவதாக நீங்கள் உணர்ந்தால், யார் நம்முடைய தனிமையை மெய்யாகவே போக்க முடியும் என்பதையும் இன்னமும் நீங்கள் அறியவில்லை என்பதே அதன் அர்த்தம்! அதாவது, உங்கள் தனிமையைப் போக்க இன்னும் கிறிஸ்து அங்கு உரியபடி இடம் பெறவில்லை.




தனிமை (Solitude) மற்றும் தனிப்பட்ட வாழ்வு (Personal life) என்பது இருவேறுபட்ட விஷயங்கள்தான். ஆனால், இவை இரண்டுமே நாம் தனி ஆள் என்ற எண்ணத்தில் உதிப்பவை. முன்னது மன அழுத்தத்திலும், பின்னது பெருமையிலும் முடியும். பவுல் பெரும் கூட்ட மக்களுக்குப் போதித்தவர். நிறைய நண்பர்கள் (பகைவர்களும்) சூழ வாழ்ந்தவர். ஊழியத்திலும் குறைந்தபட்சம் அப்போஸ்தலனாகிய லூக்காவாவது உடன் இருந்திருக்கிறார். எல்லா ஊர்களிலும் பவுலை வரவேற்று அனுப்பிவைக்க ஏராளமான நண்பர்கள் இருந்தனர். அவர்களை வாழ்த்துவதற்கே ஒரு அதிகாரம் ஒதுக்க வேண்டியிருந்தது. சிறையிலும்கூட அவர் முற்றிலுமாகத் தனிமைப்பட்டுத்தப்பட்ட நாட்கள் குறைவு. ஆரம்பகாலச் சிறைவாசத்தில் உடன் பாடுவதற்கு சீலா இருந்தார். சிறை அதிரப் பாடினார்கள். ஆனால், கடைசி அதிகாரத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

“எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள் (2 தீமோ 4:16) - ஆனால் - கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று... என்னைப் பலப்படுத்தினார் என்று (வ 17). “எவ்வளவு மெய்யான வார்த்தை இது. அதாவது, பவுல் ஒருக்காலும் தனிமையில் இல்லை.

பழைய ஏற்பாட்டுப் பக்தர்களையும் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். யோசேப்போ, தானியேலோ, தன் பிள்ளைகள் எவரையும் அவர் தனிமையில் விடுவதில்லை என்பது நாம் அறியாததல்ல. இவர்கள் சிறைப்பட்டாலும், கர்த்தர் அவர்களுடன் சிறைகளுக்குள் கரம்பிடித்துத் துணையிருந்தார்.

அவர்கள் இமைப்பொழுதும் நீங்காத நேசருடன் தனிமையே இல்லாமல் கழித்தனர். இன்று நாமும், நம்முடன் எப்போதும் பரிசுத்த ஆவியானவர் நிமிடம் நீங்காமல் உணர்த்திப் போதித்துச் செயல்படவைப்பதால் ஒருநாளும் தனிமையில் இருக்கவும் முடியாது. அப்படி வாழும் தனிப்பட்ட வாழ்வு என்று ஒன்றும் நமக்குக் கிடையாது; தனிப்பட்ட விருப்பங்கள் என்றும் எதுவும் கிடையாது. ஒருவேளை தனிமை உணர்வை விடமுடியாமலும் இல்லையென்றால் அதை விரும்பி வாழ்ந்துகொண்டும் இருந்தால் நாம் எச்சரிப்பாக நினைவில் கொள்ளவேண்டியது – "பிசாசானவன் உங்களைத் தனிமையில் விட்டுப் போகப் போவதில்லை!".

## ஏன் இப்படி?

நாம் நம் உடலிலும் ஆத்துமாவிலும் தனிமையில் இருந்தாலும், நம் ஆவி தனிமையில் இருப்பது என்ற ஒரு நிலையே கிடையாது என்பதுதான் இதற்குக் காரணம். (பரிசுத்த)ஆவியான தேவனோ, இல்லை (அசுத்த) ஆவியான எதிரியோ – இருவரில் ஒருவர் நம்முடன் இருந்தே ஆகவேண்டும். இதனால்தான் சொல்கிறார்கள் தனிமை அபாயமனது என்று. இதை நாம் நம் சரியாக உணர்ந்தால், ஆத்துமா தனிமையை உணராது. வெளிப்பார்வைக்குச் சரீரத்தில் தனியாக இருப்பவனோ உள்ளுக்குள் பெரும் பலத்துடன் இருப்பான். பாவத்தைவிட்டு விலக, கலக்கங்களை மேற்கொள்ள நம் ஆவியில் தேவனுடன் கொண்டிருக்கும் நீங்காத ஐக்கியமானது தொடர்ந்து உதவும். அவரும் தனிமையைப் போக்க சும்மா நம்முடன் இருந்து வீண் அரட்டை அடித்துக்கொண்டிருப்பதில்லை. மாறாக, தன் பெரும் பலத்தைத் தன் வார்த்தையால் நமக்குத் தருகிறார்.



இது ஒரு மெய்கிறிஸ்தவ அனுபவம்! அனைவருமே அறியவேண்டிய ஒன்று. கர்த்தருடனும் அவருடைய வார்த்தையுடனும் இணைந்த ஒருவன், மற்றவருடனும், அவர்களது நல்லுறவிலும் இணைந்திருப்பான். இது சத்தியம்.

நான் தனியாக இருக்கிறேன் என்ற உணர்வு தன்னுடன் பிரியாதவர் இருக்கிறார் என்பதை அறிந்தவனுக்கு வருவதில்லை. தன் வாழ்வை வகைப்படுத்தி வாழ நினைக்காதவர் தன் முழு வாழ்விலும் இறைவன் இணைந்திருப்பத்தை அறியாமல் போவதில்லை.

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை (உபாகமம் 31:8) என்று சொன்னவர் நம்மையும் தனித்துவிட்டு வேறு வேலை ஒன்றுக்குச் செல்வதுமில்லை. "நான்... இருவர்!" என்பதை உணர ஆவியானவர் உதவி செய்வாராக.




# மாறிப் போனவைகள் – 4

கார்த்திகா ராஜ்குமார்

உதகை அரசினர் கலைக் கல்லூரியில் படிக்கும்பொழுதுதான் இந்த கிரிக்கெட் காய்ச்சல் எனக்குப் பிடித்தது. நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கிற ஆங்கில வகுப்பில் கடைசி பெஞ்சில் ஜன்னலோரம் சரிந்து, வெளிப்புறமாய் வைத்திருப்பவர்களின் குட்டி ட்ரான்ஸ்சிஸ்டரில் நிரந்தர கர்கர்களுக்கு நடுவே கவாஸ்கர் அடிக்கிற கவர் டிரைவ் பற்றி வர்ணனையாளர்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருப்போம். அந்தக் குட்டி கையடக்க ஒலிபரப்பியின் வழியாகவே எங்கள் மனத்திரைகளில் டெஸ்ட் மேட்ச் நடக்கும். பின்பு ஒருநாள் போட்டிகள் ஒட்டகம்போல் உள் நுழைந்து, தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு துவங்கியவுடன் நிலைமைகள் மாறின.


உதகையின் உயர உசில் மேட்டில் ஒரு தூர்தர்சன் ட்ரான்ஸ் பொன்டெர் என்று ஒல்லியான டவர் வைத்ததும் வைத்தார்கள், கிரிக்கெட் ஒரு நாள் போட்டிகள் நடக்கும்போது எனக்குத் தெரிந்து அந்த நாட்களில் எல்லா வீட்டு கூரைகளிலும் வீட்டிலும் 90 டிகிரியிலோ இல்லை சற்று சாய்மானமாகவோ அன்டனா பைப்கள் முளைத்திருக்கும். சிலர் அந்த அன்டனாவில் அதன் குறுக்கில் நீட்டிக் கொண்டிருக்கும் குட்டி அலுமினிய பைப்களில் கரண்டிகளை, தட்டுகளை கம்பி கட்டி சேர்த்திருப்பார்கள்.



ஒரே காரணம், எப்படியாகிலும் விண்ணில் மிதக்கும் கிரிக்கெட் ஒளிபரப்பு அலைகளை நைசாக தத்தம் வீட்டு தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குள் கடத்தி வருவதுதான். இன்னும் பல உத்திகள் நாங்கள் எப்படியாகிலும் நேரடி ஒளிபரப்பைக் காணும் முனைப்போடு இருக்கும்போது உலா வரும். அப்படி ஒளிபரப்பாகிற மேட்ச்களும் இந்த தூர்தர்சன் மக்கள் மிகுந்த தேசபக்தி உள்ளவர்களானதால், அநியாயமாக செய்திகளுக்கு மற்றும் இன்னபிறவற்றுக்காக நேரடி ஒளிபரப்பிற்காக ஏன் மெனக்கெட்டோம் என்று அழ வைத்துவிடுவார்கள்.

இந்தப் பைத்தியம் இன்னொன்றுக்கும் வழிவகுத்தது. அப்பொழுது HPF ல் இருந்தோம். அப்பொழுது என் பேரில் மிகவும் அன்புகொண்ட சுழற்பந்து வீச்சாளர் தர்மராஜ் அவரின் ஆலோசனையில் அவரின் கிரிக்கெட் கிளப்பில் சேரப் பார்த்தேன். எனக்கு மிகவும் நெருங்கின வாலிபால் பிரேம் என்று அறியப்பட்டிருக்கிற நண்பனோடு சேர்ந்து அசெம்பிளி திரையரங்கரத்திற்கு அருகில் உள்ள லாட்ஜின் உள் இருந்த பகுதியில் இருபத்தேழு வயதில் முதல் தடவையாக நிஜமான கிரிக்கெட் பந்தும், மட்டையுமாய் பரவச பயிற்சிகளில் ஈடுபட்டு வெகு சில மாதங்கள் கழித்து, ஒரு சில கௌரவமான அடிகள் வாங்கியவுடன் ஓய்வு அறிவித்தாலும் ஒரு நாள் போட்டிகள் பார்க்கிற பித்து மட்டும் அமோகமாயிருந்தது.

ஒருநாள் போட்டி நடக்கிற நாட்களில் ஒருவித பரபரப்பு தொற்றிக் கொள்ளும். ஆஸ்திரேலியாவில் நடந்த உலகக் கோப்பை அது. அதன் ஒளிபரப்பு ஏதோ ஒரு சானலில் சில இடங்களில் மட்டும் தெரிகிறதென சொன்னார்கள், உசில் மேடு போவது முழி பிதுங்க வைக்கிற விஷயமென்பதால் கோடப்பமந்துவில் உள்ள எங்கள் நண்பன் லோகு அவர்கள் வீட்டில் அவன் அண்ணாவின் அந்த நாளின் லேட்டஸ்ட் டிவியில் தெரிந்ததாகச் சொல்ல, எல்லோருமாக படையெடுத்தோம். ஒத்த ஈடுபாடு உள்ளவர்களுடன் மேட்ச் பார்ப்பதின் சுகம் என்னவென்றும், வீட்டில் இருக்கிற அம்மா எப்படியாக சலித்து சபித்து, ஆனமட்டும் தடை போடுகிற காரியம் பற்றியும் தனியாக ஒரு கட்டுரை எழுதலாம்.



உலகக்கோப்பை ஃபைனல் அன்று போனோம். எங்களது ராசி அன்றைக்கென்று டிவி திரைக்கு முன்பாக மிக மெலிதான மாவு மழை பெய்து கொண்டிருந்தது. அவற்றினூடே இளம் நீல இந்திய வீரர்கள் தூள் கிளப்பிக் கொண்டிருந்தனர். ஸதானந்த் விஷ்வநாத் ஸ்டம்ப்ஸ் பின்பாக இருந்து பேசி சலித்தார். ரவி சாஸ்திரி ஆட்டநாயகன். கண்கள் எரிச்சலில் சிவந்திருக்க, ஆனால் மனம் இந்தியா பாகிஸ்தானை ஜெயித்ததில் பரவசமாகியிருக்க, வீட்டிற்கு வந்து அம்மாவிடம் வெற்றியை வர்ணிக்க, அம்மா அமைதியாக, "இதில உனக்கு ஏதாவது கிடைச்சுதா, இந்த கண்ணு சிவந்து கிடந்த தலைவலியைத்தவிர" என்று வடை கொடுத்தாலும் புத்தி வந்ததே இல்லை என்பதுதான் உண்மை.

காலம் சற்று மாற தூர்தர்சன்காரர்கள் மனமிறங்க, டிவிக்களில் சானல் 9ம், ஸ்டார் ஸ்போர்ட்ஸ், ESPN போன்றவை பல நண்பர்கள் வீடுகளில் உள் புகுந்திருக்க இம்முறை நாங்கள் அதிகம் அவதிப்படாமல், அப்பொழுது பாம்பே காஸ்டல் பகுதியில் இருந்த வீரமணி வீட்டிற்குப் போவோம். அம்மாவிடம் தாஜா செய்து, சொல்லும் வேலை முடித்து, இன்னொரு வீட்டிற்குப்போய் பாதி நாள் இருப்பது அந்த வீட்டுப் பெண் மக்களுக்கு எத்தனை அசௌகரியம் என்று அம்மா ஆரம்பிக்க, வீரமணியின் அம்மாவும் அக்காவும் அப்பாவும் எப்படி கிரிக்கெட்டை ரசிப்பவர்கள் என்று சொல்லி, உள்ளத்தில் சிறந்த குடும்பத்தில் இவர்களுக்கு இடமுண்டு என்று அம்மாவை அடக்கிவிட்டு போவதற்குள் பலதடவை நம் டொனி கிரெக் வர்ணனையை ஆரம்பித்திருப்பார்.

என்ன கொடுமை நிகழுமென்றால், பல தடவைகள் மின் வெட்டு வந்து மண்டை காய வைப்பது. அதைவிட தெரியாத காரணத்தால் ஒளிபரப்பு தடங்கலுக்கு



வருந்தித் தொலைப்பது. இந்தச் சோதனைகளையும் மீறி தன் முயற்சியில் சற்றும் சலிக்காத விக்கிரமாதித்யர்களாய் பார்க்க, டெண்டுல்கர் எங்களோடு பலதடவை மேட்ச் முடிந்தபிறகும் பேச்சில் இருந்து கொண்டிருப்பார்.

இன்று நம் ஆண்ட்ராய்டு கை பேசிக்குள் எல்லா ஒருநாள் போட்டிகளும், துடிதுடிக்கும் டீ 20 போட்டிகளும் ஹாட் ஸ்டார் உபயத்தில் எப்போதும் உங்களருகில். அம்மாவோ மனைவியோ சொல்லும், சொன்ன அறிவுரையோ (இத்தனை வயசாயும் இதெல்லாம் போரடிக்கலையா? அவன் ஆடி கோடியா சம்பாதிக்கிறான் உங்களுக்கு? பையனையும் சேர்த்தி கெடுக்கிற மாதிரி தோணலயா... இத்யாதிகள்),

நெருங்காத வகையில் எப்போது வேண்டுமானாலும்கூட பார்த்துவிட எதுவாக இருப்பது உண்மைதான் என்றாலும் காத்திருந்து மேடேறி, அலைந்து, நண்பர்களுடன் கை தட்டி சிரித்து, நடுவில் வரும் சுடசுட ஜட்டங்களை கொறித்து ருசித்து இந்திய வெற்றியில் குதித்து கொண்டாடின சந்தோஷம் இப்போதைய நவீன கிடைத்தல்களில் உண்டோவெனில் வருத்தமுடன் மௌனிக்க விரும்புகிறேன்.

# கணினிக் காலத்துக் கிறிஸ்மஸ்...

டேவிதன்

கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்
கணினிக் காலத்து தலைமுறை - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

ஆயுளுக்கும் அப்பன் சம்பாதித்ததை
ஆறுமாதத்தில் சம்பாதிக்கும் தலைமுறை - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

மரங்களை வெட்டி அழித்துவிட்டு - பிளாஸ்டிக்
மரங்களை நட்டு அழகு பார்த்திட
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

ஏழைகளின் குடிசையை எட்டிப்பார்க்காத - நாங்கள்
இயேசுவின் குடிசையை அழகுபடுத்திட
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

பசிக்கு உணவின்றி பலர் இருக்க - பெருமைக்கு
பர்க்கரும் பீசாவும் சாப்பிட்டு
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

நல்ல உடையின்றி பலர் இருக்க - நாங்கள்
நாகரீகம் என்ற கிழிந்த உடையணிந்து
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

குடும்பத்தினர் பலர் வறுமையில் தவிக்க - நாங்கள்
குடியைக் கெடுக்கும் மதுவைக் குடித்து
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

சீர்கெட்ட எங்கள் வாழ்வை மறைக்க
சீரியல் விளக்கு அலங்காரத்துடன்
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம் - நாங்க
கிறிஸ்மஸ் கொண்டாடப் போறோம்

உண்மையைச் சொல்லப்போறேன் கேளுங்க - அதை
உரக்கச் சொல்லப்போறேன் கேளுங்க
அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வதே
ஆண்டவர் விரும்பும் அர்த்தமுள்ள கிறிஸ்மஸ்

கிறிஸ்மஸ் கொண்டாடுவோம் - நாம்
கிறிஸ்மஸ் கொண்டாடுவோம்
ஆண்டவர் விரும்பும் அர்த்தமுள்ள கிறிஸ்மஸை
அனைவரும் கொண்டாடுவோம்.

குருத்தோலை

# அரட்டை பாப்



✍ ராபர்ட் க்ளமெண்ட்ஸ்




## பயிற்சி ஓட்டுநர்போல...

மும்பையின் புதிய விமான நிலையத்தின் ஒரு சிக்கல் என்னவெனில், ஒவ்வொரு முறை போகும்போதும் ஏதேனுமொரு மாற்றத்தை நாம் பார்க்கமுடியும். இம்முறை நான் சென்றிருந்தபோது நான் வழக்கமாகக் காரில் போய் நிற்கும் பகுதி, முக்கியஸ்தர்கள் (VIP) கார் நிறுத்தும் பகுதியாக மாற்றப்பட்டிருந்தது. நிச்சயமாக, நான் அங்கு போக வேண்டிய நபரில்லை.

“சார்... தயவுசெஞ்சு கொஞ்ச முன்னால போயி, திரும்பி வெளிய வந்துடுங்க” என்று பண்புடன் அங்கிருந்த பணியாளர் சொன்னார். நான் காரைச் சற்று முன்னே நகர்த்தி, ரிவர்சில் வருவதற்காகப் பார்த்தபோது, என்னால் பின்பகுதியைப் பார்க்க முடியவில்லை. அது ஒரு சாய்மானமாக இருந்ததாலும், இன்றைய நவீன கார்களில் சிறிய அளவிலான பின்பார்க்கும் கண்ணாடிகள் இருப்பதாலும், பின் பகுதியையோ, பக்கப் பகுதியையோ சரியாகப் பார்க்க இயலவில்லை.

கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக நான் காரை ஓட்டியிருந்தும் அப்போது பழகுநர்போல உணர்ந்தேன். பக்கச் சுவர்களையோ, அவர்கள் அமைத்திருக்கும் தடுப்புகளையோ இடித்து விடக்கூடும் என நான் ரிவர்ஸ் வர பயந்தேன்.

“பின்பக்க கேமராவ பாக்கலாமே?” என்று உங்களில் பலர் என்னைக் கேட்கலாம். பார்த்தேன். காரை வாங்கியபோது அதையெல்லாம் பொருத்தியிருந்தேன். நம்முடைய பொத்தலான சாலைகளில் ஒருநாள் போய்க்கொண்டிருந்தபோது அது கழண்டு தனியே வந்துவிட்டது. அது மீண்டும் பொருத்தப்பட்டது என நினைக்கிறேன். ஆனால், சரியாக வேலை செய்கிறதா என என்னுடைய டிரைவரை நான் கேட்கவில்லை. இப்போது ஒருவேளை அது சரிந்து கிடக்கலாம், அல்லது ஒரு வயரின் பலத்தில் தொங்கிக் கொண்டிருக்கலாம். அது பின்பக்கத்தைத்தான் காட்டுகிறதா அல்லது பக்கப் பகுதியைக் காட்டுகிறதா என யாருக்குத் தெரியும்?

நான் காரைச் சற்று பின்பக்கமாக நகர்த்தினேன். அங்கிருந்த பணியாளர் பயத்தில் வேகமாக விசிலை ஊதினார். கடைசியாக, எப்படியோ முன்னும் பின்னுமாக நகர்த்தி, திரும்பி வந்துவிட்டேன்.




அங்கிருந்த பணியாளர்கள் "ஒட்டிப் பழகுகிறார்போல" என்று தங்களுக்குள் தலையசைத்துக்கொண்டதையும் கவனித்தேன்.

இல்லை! நிச்சயமாக இல்லை! இதெல்லாம் நடந்ததற்கு காரணம் நான் என்னுடைய பின்பக்க கேமராவை நம்பாததுதான்.

அது சரியாக வேலை செய்ததா? அல்லது வேறொரு சாலையைக் காட்டிக் கொண்டிருந்ததா? எனக்கு உறுதியாகத் தெரியாது. ஒரு நல்ல ஓட்டுநரான என்னால் சமாளிக்க இயலாத ஒரு சூழல் அது. உங்களில் எத்தனை பேர் என்னைப்போல அனுபவித்திருக்கிறீர்கள்?

நம்முடைய சமயம் சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, ஜெபங்களைச் சொல்வது, பாடல்களைப் பாடுவது என அனைத்தையும் மகிழ்வுடன் செய்கிறோம்.

ஆனால், நம்முடைய நம்பிக்கையைப் பயன்படுத்த வேண்டிய சூழல் நிஜவாழ்க்கையில் வரும்போது, கடவுளைப் பற்றிய நம்முடைய நமிக்கையில் உறுதியாக நாம் இருக்க முடிவதில்லை, நம்முடைய நம்பிக்கை தளர்ந்து விடுகிறது. அவரால் இதைச் செய்ய முடியுமா? அவரை நம்பலாமா?

என்னுடைய காரை நான் ரிவர்ஸ் எடுக்க முடியாததற்கான அதே காரணம்தான் இதற்கும் என நான் நினைக்கிறேன். நான் அந்தத் தயாரிப்பை (பின்பக்க கேமிரா) கவனிக்கவில்லை. நீங்கள் செய்கிறீர்களா? உங்கள் நம்பிக்கை அல்லது விசுவாசத்தை ஆழமாகக் கவனித்திருக்கிறீர்களா? வேதப்பகுதிகளை வாசித்திருக்கிறீர்களா? தங்களின் சிக்கல்களில் கடவுள் எப்படித் தங்களுக்கு உதவினார் என மக்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறீர்களா? ஜெபித்திருக்கிறீர்களா? அல்லது எனக்கு நடந்ததைப்போல, அந்தப் பணியாளார்கள் "ஒட்டிப் பழகுகிறார்போல" என்று சொல்லும் நிலைக்குப் போகப் போகிறீர்களா? ஆண்டவரை அறிந்துகொள்ளுங்கள்! ஜெபத்தில் அவரைச் சோதித்து அறியுங்கள்! அவருடைய வார்த்தை மூலம் அவரை அறியுங்கள்!

பின்னர், நெருக்கடிகளின் ஊடாக கைதேர்ந்தவர்கள்போலப் பயணியுங்கள்.

**ஆசிரியரின் இதர படைப்புகளை ஆங்கிலத்தில் வாசிக்க https://bobsbanter.com/ என்ற இணையதளப் பக்கத்தைத் தொடரலாம். rtgclements@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்புகொண்டு வாட்சப்பில் தினமும் அவருடைய கட்டுரைகளை ஆங்கிலத்தில் பெறலாம். இக்கட்டுரையானது ஆசிரியரின் அனுமதி பெற்று, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.**




# சிரிப்பு பாஸ்டர்

**சில பயணங்கள் | சில பாடங்கள் | ஆனாலும் சிரிப்பு உறுதி**

**ஜெஸி மணாளன்**

சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையம் பரபரப்பாக இருந்தது. நேரம் காலை 11.30 மணி. நான் செஞ்சி செல்வதற்காக, திருவண்ணாமலை (122 FP Express) அரசுப் பேருந்தில் ஏறி அமர்ந்து இருந்தேன். வண்டியில் இருபது பேருக்கு மேல் இருக்கலாம். இன்னமும் பேருந்து கிளம்பவில்லை. நான் முன்பக்க வாசலில் இருந்து இரண்டாம் வரிசையில் இருவர் இருக்கும் இருக்கையில் ஒருவனாக அமர்ந்து இருந்தேன்.

எனக்குப் பின்புறம் மூன்று வரிசைகள் தள்ளி அதேபோல் இருவர் இருக்கும் இருக்கையில் இருந்த ஒருவருக்கு ஒரு அலைபேசி அழைப்பு வந்தது. பேருந்தில் சற்றே அமைதியான சூழல். அலைபேசியை எடுத்தவர், சற்று உரத்த குரலில் "ஆமா..நான் பாஸ்டர் தான் பேசறேன், ஆங்... சொல்லுங்கள்" என்றார்.

"..............." (எதிர்முனையில் ஏதோ பேசியிருக்கிறார்)

"ஸ்தோத்திரம் பாஸ்டர், ப்ரைஸ் த லார்ட்"

"........................" (எதிர்முனையில் ஏதோ பேசியிருக்கிறார்)

"பாஸ்டர், உண்மையா நான் இப்போ மகாபலிபுரத்திற்கு உங்களைப் பார்க்கத்தான் வந்துக்கிட்டு இருக்கேன். கோயம்பேடு பஸ் ஸ்டாண்டில் இருந்து பஸ் கூட கிளம்பப் போகுது. இன்னும் இரண்டரை மணி நேரத்திலே அங்கு இருப்பேன்", என்றதும் அருகில் இருந்த எல்லாரும் அவரை ஒருமாதிரியாகப் பார்த்தனர். நானும் பின்னால் திரும்பிப் பார்த்தேன். என் பக்கத்தில் இருந்த பெரியவர் ஒருவர் "சார் இந்த பஸ் திருவண்ணாமலைதானே போகுது, இது பாண்டிச்சேரி போற பஸ் இல்லையே, கரெக்டா சொல்லுங்க சார், நான் செஞ்சி போகணும்" என்றார். "ஆமாங்க இது திருவண்ணாமலை பஸ்தான்" என்றேன். "இல்லை ஐயா, தப்பா நினைக்காதீங்க, அந்த போனில் பேசறவர் மகாபலிபுரம் பஸ்ன்னாறே, ஒரு வேளை இது பாண்டிச்சேரி போற பஸ்ஸோ" என்றார். "இல்லை ஐயா நீங்கள் ஒண்ணும் பயப்பட வேண்டாம்,

நானும் செஞ்சி போறதுக்கு தான் இந்த திருவண்ணாமலை பஸ்ஸில் ஏறி இருக்கேன், நீங்கள் தைரியமாக இருங்கள்'' என்றேன்.

ஆனால் அந்த போன் பேசிய நபர் (பாஸ்டர்?) எதைப்பற்றியும் கவலைப்படாமல், ''உண்மையாதான் பாஸ்டர், நான் இப்போ மகாபலிபுரத்துக்கு உங்களை பார்க்கத்தான் வந்துகிட்டிருக்கேன், நான் வைக்கிறேன் கண்டக்டர் வந்துவிட்டார், டிக்கெட் எடுக்கணும், இன்னும் இரண்டரை மணி நேரத்தில் உங்களை நேர்ல மீட் பண்றேன், ஓகே, ஓகே என்று நல்ல பிள்ளையாக மீண்டும் ஒரு ப்ரைஸ் த லார்ட் போட்டு விட்டு, சிரித்துக் கொண்டே அலைபேசியினைத் துண்டித்தார். அப்போது அங்கு வந்த கண்டக்டரிடம் ''எனக்கு திருவண்ணாமலைக்கு ஒரு டிக்கெட் கொடுங்க'' எனச் சொல்லி ஐநூறு ரூபாயை எடுத்து நீட்டினார். அங்கே தேவ நாமம் அமைதியாக அல்லோகலப்பட்டுக் கொண்டு இருந்தது. ஒருவேளை இவர் சிரிப்பு பாஸ்டரா இருப்பாரோ என நான் சிந்தித்து கொண்டே இருக்க, சற்று நேரத்திற்கெல்லாம் அப்படியே தூங்கிப் போனார் அந்தப் பாஸ்டராகப்பட்டவர்.

**பின் குறிப்பு:** சிரிப்பு துணுக்குகளைப் படித்திருக்கிறோம், சிரிப்பு நடிகர்களைப் பார்த்திருக்கிறோம், இப்போது, இப்படியாக சில சிரிப்பு பாஸ்டர்களையும், சில சிரிப்பு டாக்டர்களையும், சில சிரிப்பு சம்பவங்களையும் பார்க்க வேண்டியுள்ளது, வேறு என்னத்த சொல்ல?

## நெட்டதில் சுட்டது...



தென்னாப்பிரிக்காவின் ஒரு பல்கலைக்கழ நுழைவுப்பகுதியில் பின்வரும் பத்தி சிந்தனைக்காக எழுதப்பட்டிருந்தது.

''ஒரு தேசத்தை அழிக்க அணுகுண்டுகளோ கனரக ஏவுகணைகளோ தேவையில்லை. கல்வியின் தரத்தைக் குறைத்து, மாணவர்கள் தேர்வுகளில் ஏமாற்ற அனுமதித்தாலே போதுமானது.''

**அப்படிப்பட்டவர்கள் மருத்துவர்களாக வரும்போது, நோயாளிகள் இறப்பார்கள்...**

**அப்படிப்பட்டவர்கள் பொறியாளர்களாக வரும்போது, கட்டிடங்கள் இடிந்துவிழும்...**


**அப்படிப்பட்டவர்கள் பொருளாதார நிபுணர்களாக வரும்போது, பொருளாதாரம் சீர்கெட்டுப் போகும்...**

**அப்படிப்பட்டவர்கள் இறையியலாளர்களாக வரும்போது, மனிதம் மரித்துப்போகும்...**

**அப்படிப்பட்டவர்கள் நீதிபதிகளாக வரும்போது, நீதி செத்துப்போகும்...**

**கல்வியின் அழிவு... ஒரு நாட்டின் அழிவு...**

**நன்றி. வின்சண்ட் ஜெபராஜ்**



ஜெஸ்வின்

# கல்யாணமாம் கல்யாணம்

## சம்பவம் 3

எழுத்தாளர் ஒரு ஆசிரியருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அந்த ஆசிரியருக்கு ஒரு அலைபேசி அழைப்பு. ஹலோ சார்... ஓ அப்படியா நல்லது நல்லது.... ஆமா சாயங்காலம் வாங்க..... ஆமா வீட்லதான் இருப்பேன். போனை வைத்துவிட்டார். என்ன சார் இந்த காலத்துல போய் கல்யாண கார்டு கொடுக்க வீட்டுக்கு வர்ரேன்னு சொல்றார். வாட்சப்புல அனுப்பிட்டு ஒரு போன் பண்ணி சொன்னா போதாதா? அவ்ளோ தூரத்திலிருந்து வரணுமா? என்றார்.

கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய். இது ஒரு அற்புதமான தமிழ் பழமொழி. சமீபகாலம் வரை பெற்றோர் பார்த்து வைக்கும் திருமணத்திற்கு உகந்த பழமொழியாக இருந்தது. அதுவரை போகாத ஊருக்குப் போய், யாரென்றே தெரியாத குடும்பத்தில் சம்பந்தம் கலப்பது. ஆனால், காலங்கள் மாறிக்கொண்டிருக்கிறது. இப்போது தீர விசாரித்தாலும் உண்மையைக் கண்டுபிடிப்பது இலகுவானதாக இல்லை.

ஆமாங்க சார். காலம் ரொம்ப கெட்டுப்



போச்சு சார். கலிகாலம் சார். ஊரு ஒலகத்துல நல்லவங்களையே பாக்க முடியல என்கிற புலம்பல் உங்கள் மனதுக்குள் எழலாம். ஆனால் அதுவல்ல நான் இங்கே சொல்ல வருவது. உண்மையில் யாருக்கும் உண்மை தெரியாத நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. காரணம் மனிதர்கள் தனித்தனித் தீவுகளாகிக் கொண்டிருக்கின்றனர்.

முன்பெல்லாம் யாராவது ஒரு நபரிடம் பக்கத்து கிராமத்திற்கோ ஒரு இடத்திற்கோ வழி கேட்டால் உடனடியாக வழி சொல்வார்கள். நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள் என்று விசாரிப்பதுடன், நமது குலம் கோத்திரம் வரைக்கும் கண்டுபிடித்துவிடுவார்கள்.

தற்போது வழி கேட்டால், வெறித்து அங்கும் இங்கும் பார்த்துவிட்டு "தெரிலயே சார்" என்கிற பதில் தாராளமாக வருகிறது. அவர்கள் ஒன்றும் வேண்டுமென்றே தெரியாமல் இருக்கவில்லை. தெரிந்துகொள்வதற்கான அவசியம் இல்லாமல் ஆகிக்கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் மினசாரமும் இல்லை. மின்சார சாதனங்களும் இல்லை. பேசுவதற்கும் பழகுவதற்கும் நிறைய நேரம் இருந்தது. பின்பு மின்சாரம் வந்தது. அப்போதும் பேசுவதற்கு நேரம் இருந்தது. உட்கார்ந்து பேச திண்ணையும் இருந்தது. இரவு சாப்பிட்டு விட்டு அப்படியே வயிற்றைத் தடவிக்கொண்டே வெளியே வந்து, தெருவிளக்கு வெளிச்சத்தில் ஏதோ ஒரு வீட்டு திண்ணையில் உட்கார்ந்து கதை பேசிய நபர்கள் பாக்கியவான்கள். உங்கள் வாழ்க்கையில் ஒரு பொற்காலத்தை அனுபவித்திருக்கிறீர்கள்.

முதலில் வந்தது ரேடியோ. ஆனாலும் எல்லோருக்கும் உடனடியாக கிடைத்துவிடவில்லை. ரேடியோ வைத்திருந்த ஒன்றிரண்டு வீடுகளில் கூடி ரசித்தார்கள். அதன்பிறகு வந்தது தொலைக்காட்சி. அப்போதும் கூடி லயித்தார்கள். முதலில்

சிலருக்கு மாத்திரம் வாய்த்த இந்த வசதிகள் போகப் போக பலருக்கும் வாய்த்தது. மிகச் சன்னமாக பிரிவு அங்கேதான் ஆரம்பித்தது. தொலைபேசி பரவலாக வீடுகளில் பயன்படுத்த ஆரம்பித்ததும் இந்தக் காலகட்டத்தில்தான். நேரில் சொல்லப்பட்ட பல விஷயங்கள் தொலைபேசி மூலமாகச் சொல்லப்பட்டது. வெளியே போய்ப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் ஏதோ குடும்பமாகவாவது சேர்ந்து இருந்து தொலைக்காட்சி பார்த்தார்கள். தொலைபேசி அலைபேசி ஆனது. தொலைக்காட்சி அலைபேசிக்குள் தஞ் சமடைந்தது. குடும்பத்திற்கு ஒன்றாக இருந்த தொலைக்காட்சியும் தொலைபேசியும் குடும்பத்தில் எல்லோருக்கும் ஒவ்வொன்று கிடைத்தது. ஆளுக்கு ஒரு மூலையில் வீட்டிற்குள்ளாகவே பிரிந்து கிடக்கிறார்கள்.

ஒரு வீட்டிற்குள்ளேயே ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள இயலாத நிலை. இதில் எங்கே பக்கத்து வீட்டுப் பையனையும் எதிர் வீட்டுப் பிள்ளையையும் பற்றித் தெரிந்து வைப்பது? தீர விசாரித்தால் மெய் கிடைத்துவிடுமா என்ன? சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும். நிற்க. எழுத்தாளர் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எதிரான பழமைவாதி. கற்கால வாழ்க்கைக்கு நம்மை அழைக்கிறார் என எண்ணிவிட வேண்டாம். தனது புதிய Apple iPad இல்தான் இதை எழுதிக்கொண்டிருக்கிறார். நாம் அசந்த நேரத்தில் தொழில்நுட்பம் நம்மைத் துவைத்து தொங்க வைத்திருக்கிறது. அதைத்தான் குறிப்பிடுகிறார்.

பழையமுறை இனி கை கொடுக்காது. காலச் சூழலுக்கு ஏற்ப நாமும் நமது முறைகளை மாற்ற வேண்டிய கட்டாயம் உண்டு. தற்போதைய சூழலில் நீங்கள் உங்கள் பிள்ளைக்குச் சரியான



வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் அதற்கு மிகச் சிறந்த வழி உங்களுக்கு மிகவும் பரிச்சயமான, உங்கள் நட்பு வட்டத்துக்குள் இருக்கிற, உங்களுடைய அடிப்படை நம்பிக்கையோடு இசைவுபடுகிற ஒரு குடும்பத்திலிருந்து உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒருவரை தெரிந்தெடுப்பதுதான். இது மட்டும் போதாது. ஆனால் இது ஒரு சிறந்த ஆரம்பம்.

இதற்கு நீங்கள் பழக வேண்டும். முயன்று பழக வேண்டும். நினைக்கும் அளவிற்கு இது எளிதானது கிடையாது. வெளித்தோற்றத்துக்கு ஒரே விதமாய் இருக்கும் குடும்பங்களுக்கிடையில் ஆயிரம் வேறுபாடுகள் ஒளிந்திருக்கும். சும்மா பத்து நாள் பழக்கத்திலெல்லாம் கண்டுபிடித்துவிட முடியாது. எனவே பழக வேண்டும். பழகித்தான் ஆகவேண்டும். பழக மாட்டோம் என நைசாக நழுவிப் போகிறவர்களை விட்டு விடுங்கள். அவர்களும் நமக்கு வேண்டாம். அவர்கள் பிள்ளையும் நமக்கு வேண்டாம். எந்த அளவுக்கு உங்கள் அன்பின் வட்டம் பெரிதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு உங்கள் பிள்ளைக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பும் பிரகாசமாக இருக்கும்.

# சிலுவையில்தான் பிறந்தார்

## ஒரு மேன்மையான கிறிஸ்துமஸ் சிந்தனை

அருள்திரு. அகஸ்டின் ஜீவக்கனி, மதுரை

கிறிஸ்து பிறப்பை எதிர்நோக்கும் வருகையின் காலத்தில் உலகெங்குமுள்ள திருச்சபை மக்கள் மெழுகுவர்த்திகளை ஒளியேற்றுவது வழக்கம். அந்த மெழுகுவர்த்திகள் நம்பிக்கையைக் குறிப்பதாகும். ஏசாயா தீர்க்கதரிசி "எல்லா மக்களினங்களும் இவர் பெயரில் நம்பிக்கைகொள்வர். கடவுள் தேர்ந்துகொண்டவர் இவரே" என்றார் (ஏசா: 42:14; மத்:12:21).

இந்த உலகத்தில் வாழும் நாம் எல்லாவற்றையும் இவ்வுலக கண்ணோட்டத்திலேயே பார்த்துப் பழகிவிட்டோம். இயேசு தமக்கென்று உருவாக்கிய இந்த அழகிய உலகிற்கு மனிதனாக வந்ததைக்குறித்து மகிழ்கிறோம். ஆனால் இயேசு இந்த உலகைவிட மேன்மையான ஓரிடத்திலிருந்து வந்தார் என்பதை நினைத்துக்கொள்ள வேண்டும். அவர் விண்ணுலகிலிருந்து வந்தவர். அந்த விண்ணுலகின் மேன்மையையும் அழகையும் நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.

இயேசு இவ்வுலகிற்கு வந்ததை நாம் தியானிக்கும் பொழுதெல்லாம், அவர் இவ்வுலகிற்கு வருவதற்காக, விண்ணுலகைத் துறக்க வேண்டியதாயிருந்தது என்பதை நினைவில்கொண்டே தியானிக்க வேண்டும்.

அவருக்கு இவ்வுலகம் எதிரிகளின் இடம், அவரை ஏற்றுக்கொள்ளாதவர்களின் இடம். இங்கே வருவது ஒரு ஆபத்தான, துணிச்சலான வருகை (மத்: 12:14).

ஆனாலும் அவர் வந்தார். மனதுருக்கமும் நீதியும் நிறைந்த ஆண்டவர். மானிடரின் அநியாயத்திற்கும் அநீதிக்கும் தம்மைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தார். அனைத்து உலகங்களையும் உருவாக்கிய கடவுள், மனிதனாய் வாழ்வதற்காக, மனுவுடலை ஏற்றுக்கொண்டு இந்த உலகிற்கு வந்தார். சிலுவையின் மரணம்வரைத் தம்மைத் தாழ்த்திச் சிலுவை மரணத்தை ஏற்றார்.

ஆம்,

அவர் சிலுவையில்தான் பிறந்தார்.

சிலுவையுடன் வாழ்ந்தார்.

சிலுவையிலேயே மரித்தார்.

சிலுவை இல்லாமல் கிறிஸ்து இல்லை.

கிறிஸ்து இல்லாமல் சிலுவை இல்லை.

* அவர் நல்லவர் என்பதை அனைவரும் அறிவதற்காக (1 பேது:2:3).
* இயேசு நம்மெல்லாருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் (எபி:2:9 ).
* நம் எல்லாரையும் மகிமையில் சேர்ப்பதற்காக இயேசு விண்ணுலக மேன்மையைத் துறந்தார் (எபி:2:10).
* நமக்கு நித்திய வாழ்வை அளிப்பதற்காக அவர் தம்முடைய வாழ்வையே கொடுத்தார் (யோவா:6:54).

இத்தகைய உயர்வான எண்ணங்களுடன் இந்த வருகையின் காலத்தைக் கொண்டாடுவோம்.



அத்தியாயம் 9

# அனெஹேராவின் விரக்தி

The DISILLUSIONMENT of ANAHERA DANIELS by J.D.SCOTT

## பத்து பதில்கள்

என் வீட்டைப் பற்றிய நினைவுகள் வந்தபோது இன்னும் அதிகமான நடுங்க வைக்கும் ஞாபகங்கள் வந்தன. “ஒரு நிமிஷம் பொறுத்துக்கோ... ஒரு உயிரினம் இருந்தது, என் ரூம்ல, இன்னிக்கு காலைல. வீட்டுக்கு வெளில ராத்திரி வந்தது. இங்கயும் அதே உயிரினம்... புல் தரைல என்னிய தாக்குனதும் அதுதான். என் தோள்பட்டையில காயம் வந்ததும் அதுனாலத்தான்.” புள்ளிகளை இணைத்துப் பார்க்க நான் முயற்சி செய்தேன். நான் கடத்தப்பட்டிருக்கிறேனா? எதுவுமே புரியவில்லை. ஏன்? எனக்கு? இது?

“உயிரினமா? அது எப்படி உயிரினம்?” அவனது கேள்வியிலேயே ஒரு சந்தேகம் தெரிந்தது.

“ம்... அதாவது, நான் அத நேருக்கு நேரா தெளிவாப் பாக்கல...” நான் நல்ல மனநிலையில் இருப்பதைப்போல காட்டிக்கொள்ள அதிகம் முயற்சி செய்ய வேண்டியது இருந்தது. “அது பெருசா இருந்தது. ரெக்கை இருந்தது... கருப்பா, நிச்சயமா அதுக்கு கூர்மையான நகம் இருந்தது அது உண்மை.” நான் சுகமாகியிருந்த என் தோளைத் தடவிப் பார்த்துக் கொண்டேன்.

“அதத்தான் நீ பாத்தியா? உறுதியாத் தெரியுமா?” அவன் தன் கால்களைச் சிறிது நகர்த்தி, நெருப்பின் வெளிச்சத்தை நோக்கித் திரும்பினான். நெருப்புக்குள்ளாகக் கூர்ந்து பார்த்தான். அவன் என்னைப் பார்க்காமல் வேறு இடத்தைப் பார்த்தது எனக்கு சிறிது வினோதமாகத் தோன்றியது.

“நான் அதத் தெளிவாப் பாக்கலன்னு சொன்னேனே?”

“அப்படின்னா, அது எதுவாவும் இருக்கலாம். அப்படித்தானே?” தன் தலையைத் திருப்பி தோள் வழியாக என்னைப் பார்த்தபோது அவனுடைய ஒரு கண் புருவம் உயர்ந்திருந்தது.

“அது எதுவாவும் இருக்க முடியாது!” அவனது சந்தேகம் என் கோபத்தை உசுப்பிவிட்டது. “என் ரூம்ல ஒரு கருப்பு இறகு கிடந்தது. வீட்டுக்கு வெளில, மரத்துல இருந்து பச்ச கலர் கண்ணு என்ன கூர்ந்து பாத்துட்டு இருந்தது. அப்புறம் என் தோள்ல அது நகத்த வச்சு புடிச்சப்போ, கிட்டத்தட்ட என்னிய தூக்கிட்டே போகப் பாத்துச்சு. அது எதுவாவும் இருக்கலாம்னு சொல்ல முடியுமா? எங்க ஊர்ல அப்படி சொல்லமாட்டங்க.” இப்போது எனக்குப் புரியத் துவங்கியது. கிட்டத்தட்ட புரிந்தது, “அது போஸ்டர்னிஸ்ல உள்ளது இல்லியா? அது பூமிக்கு வந்திருக்கலாம். அப்புறமா இங்க என்ன கொண்டு வந்திருக்கணும்.” கேள்வியை விட பதில் மெதுவாகத்தான் வந்தது. எனது விளக்கம் அவனிடம் இருந்து எந்த பதிலையும் கொண்டுவரவில்லை என்பது எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

“நீ சொன்ன உயிரினம் போர்ட்டலத் திறந்திருக்க முடியாது!”

“ஏன் திறந்திருக்க முடியாது?” எனக்கு சப் என்று இருந்தது.

“நான் தெளிவா உனக்குச் சொல்லியிருக்கணும். போஸ்டர்னிஸ்ல பிறந்திருந்தா மட்டும் போதாது, பல தலைமுறைகளா, இங்கேயே வாழ்ந்திருக்கிற குடும்பத்துல இருந்து நீ வந்திருந்தாத்தான் இங்கே நீ நுழைஞ்சிருக்கவே முடியும். வேற எங்கப் பிறந்திருந்தாலும் இங்க உள்ள வாசலத் திறந்து உள்ள நுழையறதுக்கு முடியவே முடியாது. நீ சொன்ன அந்த உயிரினம் எங்க உலகத்துல உள்ளது இல்ல. நீ எப்படி இங்க வந்தேன்னும் எனக்குப் புரியல, உன்ன எப்படி உங்க உலகத்துக்குக் கொண்டு போறதும்னும் எனக்குத் தெரியல.”

“அப்படின்னா என்னத் தாக்கின அந்த உயிரினம் என்னன்னு உனக்குத் தெரியுமா?” அவன் பேசுவதைவிட அதிகம் தெரிந்தவன் அவன் என்பதுபோலத் தோன்றியது.



“ம், அது ஒரு பெரிய கத.” தட்டையான குரலில் பேசினான். அதில் எந்த ஆர்வமும் இருப்பதாகத் தெரியவில்லை.

“ஒரு நிமிஷம் பொறு. இன்னிக்கு எனக்கு என்ன வேலையெல்லாம் இருக்குதுன்னு பாத்துக்கிறேன்” என்று சொல்லியபடியே என் இடது உள்ளங்கையில் வலது சுட்டு விரலால் ஒரு பட்டியலைப் பார்ப்பதுபோல பார்த்துவிட்டு, “எனக்கு ரொம்ப முக்கியமான ப்ரோக்ராம் இருக்குது. அத எல்லாம் கேன்சல் பண்ணிட்டேன். இப்போ நான் ஃப்ரீதான். கொஞ்சம் எனக்கு அறிவுக்கண்களத் திறந்துவிடு” என்றேன்.

அவன் என் பொறுமையைக் கண்டு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்; தன் தலைமுடிக்குள் விரல்களை விட்டு கோதிக் கொண்டான். கண்களை இன்னும் நெருப்பை நோக்கித்தான் திருப்பியிருந்தான். “இங்க இருந்து பக்கத்துல ஒரு உலகம் இருக்குது. அது உலகங்களுக்கு இடையில பயணம் செய்யக்கூடியவங்களுக்கு உரியது. அதுக்குப் பேரு அட்மெட்டா. அங்க இருக்கிற பலவிதமான உயிரினங்கள்ல க்ரேலகோ அப்படின்னு ஒரு மிருகம் இருந்தது.”

“அப்படின்னா இப்போ அந்த மிருகம் அந்த உலகத்துல இல்லியா?” என்னுடைய ஆர்வம் அதிகரித்தது. உயிரினங்கள் அதிகம் இருக்கும் மற்ற உலகங்கள். அறிவியல் கதைகள், சினிமாக்களில்தான் இப்படிக்



கேள்விப்பட்டிருக்கிறேன். கற்பனை என் கண் முன்னே உயிரடைகிறது என்பதை நினைத்து நான் சிறிது மகிழ்ச்சியாக உணர்ந்தேன்.

"நீ குறுக்க மறுக்க பேசினா நீளமான கதையா ஆயிரும்." அவனது சந்தேகப் புருவத்தை உயர்த்தினான் அவன். மீண்டும் நெருப்பை நோக்கித் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

"சாரி, சாரி, சாரி, நான் இனிமே குறுக்கப் பேசாம கேக்கிறேன். சொல்லு."

"க்ரேலெகோ அட்மெட்டாவோட சமாதானப் படை. ஆனா கண்களுக்குத் தெரியாத உயிரினம். அது எந்த உருவத்துக்கும் மாறக்கூடிய சக்தி உள்ளது."

என் முகம் கோணலானது வார்த்தையில் வராத ஒரு கேள்வியாக அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அவன் புரிந்துகொண்டு பதில் கொடுத்தான், "எந்த உலகத்துல உள்ள எந்த உயிரினம் மாதிரியும் அவங்களால உருவத்த மாத்திக்கிட்டு அவங்களுக்கு நடுவிலேயே ரகசியமா நடமாடிக்கிட்டு இருக்க முடியும்." எனக்குப் புரிந்ததுபோலத் தலையை ஆட்டிக் கொண்டேன். "சில விஷயங்கள்ல அவங்களால நிறைய விஷயங்கள செய்ய முடியாதுன்னாலும், அவங்க எந்த உருவத்த எடுக்கணும்னு நினைக்கிறாங்களோ, அந்த உருவத்த அவங்களால எடுக்க முடியும். பல நூற்றாண்டு காலமா அவங்க பல போர்களையும், மோசமான அழிவுகளையும் நிறுத்தியிருக்காங்க. தங்களுக்குப் பாராட்டோ, பரிசோ வேணும்னு அவங்க எதிர்பாக்கவும் மாட்டாங்க."

"அவங்க நம்மள மாதிரியும் மாற முடியுமா? - மனுஷங்க மாதிரி? அது கேக்கவே ஒரு மாதிரியா இருக்கே?"

இப்போது அவனது இரு புருவங்களும் மேலே உயர்ந்திருக்க, அவன் என் முகத்தின் அருகே நெருக்கமாக வந்து சொன்னான். நானும் என் உதடுகளை மூடிப் பூட்டு போட்டதுபோல சைகை காட்டினேன்.

"க்ரேலெகோ பத்தி ஒரு பாரம்பரியக் கதை இருக்குது. அவங்களோட சக்தி, அவங்களோட உண்மையான உருவம் எல்லாத்தையும் பத்தி நான் கேள்விப்பட்டத வச்சுப் பாத்தா, அவங்க உன்னோட நெருங்கிப் பழகியிருக் காங்கபோல இருக்குது." அவன் மெதுவாக முன்பு காயப்பட்டிருந்த என் தோளைப் பார்த்தான். "அது எல்லாம் வெறும் கற்பனைக் கதைதான்னு நிறைய பேர் நினைச்சுட்டு இருந்தாங்க. ஆனா அப்புறமா சூழ்நிலைகள் எல்லாமே மாற ஆரம்பிச்சிருச்சு."

என் வாய்க்குள் நிறைய கேள்விகள் முண்டியடித்துக் கொண்டு வந்தன. நான் என் சோதனையை வெற்றி கொண்டுவிடுவேனா என்று அவன் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டான். நான் வெற்றியுடன் நிமிர்ந்து, அமைதியாக உட்கார்ந்திருந்தேன்.

"உனக்கு அவங்களோட வரலாறு தெரியணும். க்ரேலோகோ சமுதாயத்துல ரொம்பக் குறைவான பெண்கள்தான் இருப்பாங்க. அரசி, பயிற்சியில இருக்கக்கூடிய அவங்களோட வாரிசுகள், அப்புறம் பொதுமக்கள்ல சில பேர்தான் பெண்களா இருப்பாங்க. நூறு வருஷத்துக்கு ஒரு தடவ, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெண்தான் அரசியா அரியணை ஏறுவாங்க. அவங்க ஒரு சில பெண்களப் பெற்று, வளர்த்து அவங்களத் தன்னோட வாரிசா வளர்ப்பாங்க.

வேண்டிய அளவுக்கு ஆண்கள் அவங்க சமுதாயத்துல இருக்கலாம். ஆனா, போன தலைமுறையில ஏதோ ஒண்ணு தப்பா ஆயிருச்சு. வாரிசா வந்த அரசிக்கு, தங்களோட இனம் எந்த பலனும் இல்லாம சேவை செய்யறது சரி இல்லன்னு நினைச்சாங்க. க்ரேலெகோ இனம் அரசாளக் கூடிய இனமா இருக்கணும்னு விரும்புனாங்க. அவங்க நாட்டுல இருந்தவங்கள்ல மூணுல ஒரு பங்கு மக்கள தன்னோட கட்சியில சேத்துக்கிட்டாங்க. கலகம் செஞ்ச கூட்டம் தங்கள கோசோன் அப்படின்னு சொல்லிக் கிட்டாங்க. அப்போ ஆட்சி செய்துட்டு இருந்த அரசிக்கு பதவி முடியறதுக்கு இன்னும் முப்பத்தேழு சுழற்சி காலம் இருக்கறப்போவே அரசியக் கொன்னுட்டாங்க. ஆனா க்ரேலெகோக்கள் இந்த கலகத்துக்கு சம்மதிக்கவே இல்ல. சம்மதிக்காதவங்க கல்லா மாறிட்டாங்க. அப்படித்தான் அவங்க தங்களோட எதிர்ப்ப தெரிவிச்சாங்க. அவங்க படை அரசிக்கு அடிமையாகிடக் கூடாதுன்னு இப்படி அவங்க தங்களையே கல்லுகளா மாத்திக்கிட்டாங்க. இதனால அரக்கியான அரசிக்கு அவங்க மேல கட்டுப்பாடு இல்லாமப் போயிருச்சு. ஆனா அவங்க சிலையா இருக்கற வரைக்கும் அது அவங்களுக்கு ஆபத்துதான். சிலைய சிதைச்சிட்டா அவங்களும் சிதைஞ்சு போயிருவாங்க.''

``அப்படின்னா காட்டுக்குள்ள, நான் பாத்த சிதைஞ்சு போயிருந்த பதுமை ஒரு செத்துப் போன கிரேலெகோவா இருக்கும் இல்லியா? ச்சே ரொம்ப மோசம்'' என் நாக்கின் மேல் எனக்கு இருந்த கட்டுப்பாடு இப்போது தளர்ந்து போனது, என் நாவு விடுதலையாகியது.

``ஆமா, அது ஒரு மோசமான போரோட சோகமான ஆதாரமா இருக்குது. இங்கேயும் சில சிலைகள் இருக்குது. அட்மெட்டா உலகத்துல இது மாதிரி பல உடைஞ்ச கல்லறைகள் இருக்குதாம். நீ என்ன சொன்ன? பதுமைகளா?''

``ஆமா எங்க உலகத்துலயும் பல கட்டிடங்கள்ல நீ சொன்ன மாதிரி சிலைகள் இருக்கும். மூலைகள்ல, தண்ணி வெளில வர்ற இடங்கள்ல இந்த மாதிரி வினோதமான முகங்கள் சிலையா இருக்கும். கார்கோய்ல் அப்படின்னு எங்க உலகத்துல சொல்லுவாங்க. அதுங்களும் க்ரேலெகோவாத்தான் இருக்குமோ என்னவோ? அதுங்க பயணம் செய்ய முடியாதுன்னா, எப்படி எங்க உலகத்துக்கு அவங்களால வர முடிஞ்சிருக்கும்?'' படபடவென்று என்னிடம் இருந்து போன கேள்விகளால் அவன் தடுமாறித்தான் போய்விட்டான். இனியும் என்னை அமைதியாக இருக்க வைக்க முயற்சி செய்வது வீண் என்று அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

``போஸ்ட்டெர்னிஸ்ல இருந்து பயணம் செய்தவங்க, அட்மெட்டா கூட நல்ல வியாபாரம் செஞ்சுட்டு இருந்திருக்காங்க.'' அவன் என் தோள்பட்டையில் இருந்த காயத்துக்குப் போட்ட மருந்து இருந்த பையைக் கையில் எடுத்துக் காட்டினான். ``அரசியும் பதவியில இருந்து ஓய்வு எடுக்கறதுக்கு முன்னால, அவங்களுக்கு விசுவாசமா இருந்த சில ஆண்களையும் கூட்டிக்கிட்டு போயிருந்தாங்க. போஸ்டர்னிஸ்ல இருந்து பயணம் பண்றவங்களும் அரசி கூடவே



போய், அரசியோட கடைசி காலத்துல மத்த உலகங்கள்ல நல்ல விஷயங்கள செய்யலாம்னு போனாங்க. உங்க உலகமும் அவங்க உதவி செய்யறதுக்காக போன இடங்கள்ல ஒண்ணு. அரசி இறந்தப்போ, ஆண்கள் எல்லாருமே வருத்தத்துல அரசிக்காக துக்கம் கொண்டாடி, கல்லா மாறிட்டாங்க. கல்லா இருந்தா அவங்க சீக்கிரமா கெட்டுப் போக மாட்டாங்க கல்லுகள் நூற்றுக்கணக்கான வருஷங்களா இருந்துட்டே இருக்கும். உங்க சமுதாயம் வளர்ந்து, மாறிட்டு வர்றத அவங்க கல்லா இருந்து பாத்துட்டு இருப்பாங்க. அவங்க எந்த ஆள் மாதிரி மாறணுமோ அப்படி உருவம் மாறிக்குவாங்க. உங்க உலகத்துலகூட அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க உதவி செய்துட்டு இருப்பாங்க. ஆனா அப்படி செய்யணும்னா அவங்க பெரிய ரிஸ்க் எடுக்கணும். கோஸன் அரசி யாராவது அங்க வரும்போது அவங்க கல்லா இருந்தாத்தான் தப்பிக்க முடியும். வேற எந்த உருவத்துல இருந்தாலும் கோஸன் அரசிக்கு அடிமையா ஆயிடவேண்டியதுதான். அந்த கெட்ட அரசி தன்னோட படையில அவங்கள சேத்துக்குவா. அவங்கள வச்சே உங்க உலகத்து மேல போர் தொடுக்கவும் முடியும்.'' சிறிது நேரம் அமைதியாக மவுனமாக நாங்கள் இருந்தோம். ``எனக்கு என்னவோ அவங்க தங்களோட அரசியோட மரணத்துக்காக துக்கப்பட்டுக்கிட்டு, கல்லாவே இருந்து, உங்க உலகத்துல நடக்கறத எல்லாம் கவனமாப் பாத்துட்டே இருப்பாங்கன்னுதான் தோணுது. எப்படியாவது நாட்கள் ஓடிப் போயிறாதான்னு எதிர்பாத்துட்டு இருப்பாங்க.''

``அது நிஜமாவே மோசம்தான். எப்போ ஒரு நல்ல, புது அரசி வந்து கெட்ட அரசி கதைய முடிப்பாங்க?''

``இனிமே அடுத்த அரசி வர மாட்டாங்க. இப்போ உள்ள அரசி தனக்கு வாரிசா பெண் பிள்ளைகளப் பெத்துக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க. அவங்க இனமே அப்படியே அழிஞ்சு போயிரும்.''

``ச்சே... ரொம்ப மோசம் இது. ஆமா உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?''

ஒரு பெருமூச்சை விட்டபடி அவன் சொன்னான், ``நான் நிறைய புத்தகங்கள் எல்லாம் படிப்பேன்.''

ஒரு காட்டான் என் முன்பாக உட்கார்ந்து புத்தகங்களைப் படிப்பான் என்று நினைத்தபோது அப்போது இருந்த சூழ்நிலையையும் தாண்டி எனக்குச் சிரிப்பு வந்தது. அவன் அதிகம் என்னிடம் பேசாமல் இருந்ததற்கு இப்போது எனக்குப் புரிந்தது. அவன் தன் கைகளைத் தன் நெஞ்சுக்கு நேராகக் கட்டிக் கொண்டு, தன் நாடியை உயர்த்தி என் கிண்டலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுபோல முறைத்தான்.

``நான் பாத்த மிருகம், கோஸன் ஏன் என்னைத் துரத்திட்டு வந்தது?''

``ஆண் பறவை மிருகம் அதுக்குக் கிடைக்கிற கட்டளைகளுக்கு அப்படியே கீழ்ப்படியும் அவ்வளவுதான். அது நிச்சயமா அரசி குடுத்த கட்டளையாத்தான் இருக்கும். அதுக்கும் அரசி பரவச் செய்த அந்த வாயுதான் காரணமா இருக்கும். அதை மூச்சுக்குள்ள இழுத்து விட்டாலேயே அடிமை மாதிரி அரசியோட ஆசைய செய்துதான் ஆகணும்.''

``இந்த பொட்டை பறவை என்னைத்





தொரத்தித் தொரத்தி அட்டாக் பண்ற அளவுக்கு நான் என்ன தப்பு செஞ்சேன்? நான் எங்கேயோ இருக்கிறேன், அதுக்கு நான் யாரோ, எவரோ.'' நான் என் முகத்தை என் உள்ளங்கைகளுக்குள் புதைத்துக் கொண்டேன். என் மடியில் இருந்த கத்தி தரையில் விழுந்து ஒலியை ஏற்படுத்தியது. நாங்கள் இருவருமே ஒரே நேரத்தில் அதை எடுக்கக் குனியவும், எங்கள் தலைகள் முட்டிக் கொண்டன. அவன் கைகள் நீளமாக இருந்ததால் கத்தி அவனுக்கே கிடைத்தது. நாங்கள் இருவருமே இடிபட்ட எங்கள் நெற்றிகளைத் தடவி விட்டுக் கொண்டிருந்தோம். அந்த நகைச்சுவையான சூழ்நிலையை நினைத்து இருவருமே சிரித்துக் கொண்டோம். கத்தியை அவன் என்னிடம் கொடுத்தான். பின்னர் சட்டென்று அதைக் கூர்ந்து பார்த்தபடியே தன் அருகே இழுத்துக் கொண்டான்.

``இது நல்லாத்தான் இருக்கு. ரொம்ப நல்ல கத்தின்னு சொல்ல முடியாது. ஆனா ஒண்ணுமே இல்லாததுக்கு இது பரவாயில்ல. அதுவும் இங்கே வந்து சண்டை போடறதுக்காக நீ வந்திருக்கும்போது இந்த மாதிரி ஒரு ஆயுதம் இருக்கத்தான் செய்யணும்.'' அவன் புன்னகைத்தபடியே அந்த கத்தியைத் திருப்பிப் பார்த்தான். அந்தக் கத்தியின் கைப்பிடியில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்களைப் பார்த்தான்.

``அது என்ன 'அ.சா.கா.டே'ன்னு எழுதியிருக்கு. அதுக்கு அர்த்தம் என்ன?''

அவன் அந்த பெயர் என்று கேட்க வேண்டும். ஆனால் இதைப் பற்றிய பேச்சு வரும்போதெலாம் எனக்கு தர்ம சங்கடமாகப் போய்விடுகிறது. அது ஏன் என்பது எனக்கே புரியவில்லை. என் முகத்தில் தெரிந்த வெட்கத்தை அவன் கவனித்திருக்கக் கூடாதே என்று நினைத்துக் கொண்டேன். ஆழமாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டேன். மெலிதாக அவன் கேள்விக்குப் பதில் சொன்னேன், ``அது என்னோட முழுப்பேரோட இனிஷியல். அனெஹெரா சாரா காபிரியன் டேனியல்ஸ். இது கேக்கறவங்கள டார்ச்சர் பண்ற மாதிரி நீளமான பேருதான். ஆனா எங்க அப்பாம்மாவுக்கு வேற பேரு தெரியலயோ அல்லது கெடைக்கலியோ. இந்தப் பேர வச்சிட்டாங்க.''

நானே என்னை வைத்து காமெடி பண்ணிக் கொண்டால் அவனால் அதிகம் என்னைப் பார்த்து சிரிக்க முடியாது என்று நினைத்தேன். ஆனால் நான் எதிர்பார்த்ததுபோல அவன் சிரிக்கவில்லை, புன்னகைக்கக்கூட இல்லை. சீரியசாகத் தன் முகத்தை வைத்துக் கொண்டு என்னையும் அந்தக் கத்தியின் கைப்பிடியையுமே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

``உன் பேரு அனெஹெரான்னா சொன்ன? அனெஹெரா சாரா காபிரியன்?'' அவனது முன் நெற்றி சுருங்கி பழைய நிலைக்கு வந்தது.

``ஆமா, அதத்தான நானும் சொன்னேன்? அப்பா பேரு டேனியல்ஸ் கடைசியில வரும். ஏன்? எதும் தப்பா சொல்லிட்டேனா?''

``ச்சே ச்சே தப்புல்லாம் எதுவும் இல்ல. அது உண்மையிலேயே நீளமான கடுப்பேத்துற மாதிரி பேருதான். அந்தப் பேருனால உனக்கு ரொம்பவே கஷ்ட்டம் வந்திருக்கும் இல்லியா?''

என்னிடம் கத்தியைக் கொடுக்கும்போது



நக்கலாகச் சிரித்துக் கொண்டான் அவன். நான் அதை என் கால்சட்டைப் பைக்குள் போட்டு விட்டேன்.

“ஆமா, கஷ்ட்டமாத்தான் இருந்தது. அத திரும்பவும் ஞாபகப்படுத்தினதுக்கு நன்றி. என் தோள்ல இருந்த காயத்துல நீ உப்பு வச்சி தேய்ச்சா எப்படி இருக்கும்? அது மாதிரி இருந்தது அந்த அனுபவங்கள்.”

இந்தப் பேச்சு எனக்கு சிறிது கஷ்டத்தைக் கொடுத்தாலும், என்னால் நக்கலாகப் பேசாமல் இருக்க முடியவில்லை. அவன் தன் நீண்ட முடியைத் தன் காதுகளுக்குப் பின்னாக ஒதுக்கி விட்டுக் கொண்டான். இப்போது அவனது தாடை நன்றாகத் தெரிந்தது. அவன் தன் தாடையைத் தடவி விட்டுக் கொண்டான். அவனுக்கு முன்பாக இருந்த தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

“அனெஹெறா, அரசன் யார்டெனால நீ திரும்ப உன்னோட உலகத்துக்குத் திரும்பிப் போக உதவி செய்ய முடியும்னு நினைக்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்துல சூரியன் உதிச்சிரும். நாம நேரா அங்கேயே போயிரலாம்.” அவன் எழுந்து நின்றான். அவனது மெலிதான விளக்கைக் கையில் எடுத்தான். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை அவன் உறுதியாகத் தீர்மானித்து விட்டதுபோல இருந்தது. அதுவும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற உறுதி தெரிந்தது.

சூரியன் உதிக்குமா? நாங்கள் இங்கே எவ்வளவு நேரமாக இருந்திருப்போம்? நான் காணமல் போனதை என் அப்பாவும் அம்மாவும் கண்டுபிடித்திருப்பார்களா? அந்த சம்பவம் நடந்தபோது எங்கள் வீடு எப்படி அல்லோல கல்லோலப்பட்டது என்று நினைத்துப் பார்த்தேன். அதைப்போல எதுவும் அவர்களுக்கு நடந்துவிடக் கூடாதே என்று நினைத்தேன். ஆனாலும் என்னால் இதையெல்லாம் தடுக்க வழி இல்லை என்பதும் எனக்குப் புரிந்தது.

“என்ன இனிமே ‘அனா’ன்னே கூப்பிடு போதும். அப்படித்தான் எல்லாரும் என்னக் கூப்புடுவாங்க. கண்டிப்பா உங்க அரசனப் பாக்க வர்றேன். எனக்கும் ஆசையாத்தான் இருக்கு. வீட்டுக்குத் திரும்பிப் போறதுக்கு சீக்கிரமா வழி தெரிஞ்சா நல்லாருக்கும். ஆனா என் ட்ரெஸ்ஸப் பாரு, கேவலமா இருக்கு.” நான் கொஞ்சம் அதிகமாகப் பேசுவதாகத்தான் இருந்தாலும், நான் இருக்கும் நிலையில் அரசனைப் பார்க்கப்போவது என்பது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாததாகத்தான் இருந்தது.

“அனெஹெறா, முதல்ல உன்னோட பேரு நல்ல பேருதான். நான் மட்டும்தான் உன்னோட பேர முழுசா, சரியா சொல்ற ஆளா இருந்தாக் கூட அது எனக்குப் பெருமையாத்தான் இருக்கும். அடுத்தபடியா, உன்னோட ட்ரெஸ் அழுக்கா இருந்தாலும் நீ அதவிட அழகாத்தான் இருக்கிற. அப்படியும் உனக்கு வேற ட்ரெஸ் வேணும்னா, அதுக்கும் அரேஞ்ச் பண்றேன்.” அவனது பாராட்டில் என் இதயம் கொஞ்சம் உருகித்தான் போனது. எழுந்து நிற்பதற்கு வசதியாக என்னைத் தூக்கிவிட தன் கையை என் பக்கமாக நீட்டினான். இப்போது எந்த தயக்கமும் இல்லாமல் அவன் கையைப் பிடித்து எழுந்து நின்றேன்.

“யோதம் இங்கேருந்து எவ்ளோ தூரம்? எனக்கு இன்னும் நிறைய கேள்விகள் இருக்குது. போற வழியில நீ எனக்கு எல்லாத் துக்கும் பதில் சொல்வன்னு நினைக்கிறேன்.”

“கண்டிப்பா, என்ன வேணும்னாலும் கேளு.”

அவனது மேல் சட்டையை எடுத்து என் மீது போர்த்தி விட்டான். அவன் கையில் இருந்த பந்தத்தை எடுத்து நெருப்பு மூட்டியபோது வைத்ததுபோல தலைகீழாகத் தீயை நோக்கி வைத்தான். நெருப்பு முழுவதையும் அந்த பென்சில் அளவிலான பந்தம் உறிஞ்சியதுபோல, சட்டென நெருப்பு அணைந்து போனது. அந்தப் பள்ளம் முழுவதும் நெருப்பு இருந்த அடையாளமே தெரியாத அளவு அணைந்து போயிருந்தது. இப்போது அந்த பந்தம் வெறும் வெளிச்சம் தரும் விளக்காக மட்டும் இருந்தது. அதைப் பார்க்க “சூப்பர்” என்று சொல்ல வேண்டும்போல இருந்தது. நான் என் ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டேன்.

நெருப்பு போனதும் வேகமாக ஓடிக் கொண்டிருந்த தண்ணீரின் சத்தம் இப்போது பின்னணியில் கேட்டது. அந்த தாளத்துடன் சொட்டு சொட்டாக விழுந்த சில துளிகளும் இசைத்துக் கொண்டிருந்தன. ஒரு சொட்டு என் நெற்றியில் விழுந்தது. நான் அதைத் துடைப்பதற்கு முன்பாகவே என் கண் புருவம் அதைத் தடுத்துவிட்டிருந்தது. அது எங்கே இருந்து வந்தது என்று தேடிப் பார்த்தேன். ஆனால் சுண்ணாம்பு விழுதுளிப் பாறையில் இருந்து வரும் கசிதுளிப்படிவு தான் கண்ணுக்குத் தெரிந்தது. அது விழுதுளிப்படிவா, கசிதுளிப்படிவா என்று எனக்குக் குழப்பமாக இருந்தது.

ஏட்ரியன் படிகளின் அடிப்பகுதியில் சிறிது நின்று என்னை முதலில் போகும்படி சைகை காட்டினான். நானும் தலையை ஆட்டி ஏற்றுக் கொண்டேன். அந்த இடத்தை விட்டுப் போவதில் இருந்த மகிழ்ச்சியில் வேகமாக ஏறினேன். பகல் வெளிச்சத்தை எப்போதுதான் பார்ப்பேனோ என்று இருந்தது. அரிசோனாக்காரியாக இருப்பதால் பட்டப்பகலும் நீல வானமும் காற்றோட்டமான வெட்ட வெளியும் எனக்கு அதிக நெருக்கமானதாக இருக்கிறது. என்னால் அவை இல்லாமல் முடியாது என்ற அளவுக்குக் கெட்டுப் போய்விட்டேன். அவை இல்லாமல் மூச்சுத் திணறியது போலத்தான் தோன்றியது. ஒரு இருட்டு அலமாரிக்குள் நாள் கணக்கில் முழுவதும் பூட்டி வைத்ததுபோல இருந்தது எனக்கு. அந்தச் சுரங்கத்தின் முடிவு என் மனக் கண்களில் தெரியத் துவங்கியது, என் காலடிகளும் வேகமாகச் சென்றன. என் கால்கள் உளைச்சல் எடுக்கவே சிறிது வேகம் குறைந்தது. மூச்சு இறைத்தது. ஏற ஏற இன்னும் போய்க்கொண்டே இருந்ததுபோலத் தோன்றியது. இப்படி நிஜ வாழ்க்கையில் கடினமான சூழ்நிலை வரும் என்று தெரிந்திருந்தால் நான் ஜிம்முக்கு ஒழுங்காகப் போயிருப்பேன். ஆனால் ஏட்ரியனுக்கு இது கொஞ்சம்கூட களைப்பாகத் தெரியவில்லை. அவன் என்னைவிட ஒரு அடிதான் பின்னால் வந்து கொண்டிருந்தான். அவன் மூச்சு சத்தம்கூட அதிகமாகக் கேட்கவில்லை. ஒருவேளை என் மூச்சு சத்தம் அவன் மூச்சு சத்தத்தை மூழ்கடித்திருக்குமோ என்று நினைத்தேன். அவன் இந்தப் படிகளில் அடிக்கடி ஏறி இறங்கியிருக்க வேண்டும் அதனால்தான் அவனுக்கு இது பெரிய விஷயமாகவே தெரியவில்லை.





இறுதியில் சுரங்கத்தின் வாசலில் மரங்களுக்கு இடையிலான வெளிச்சக் கதிர்களைப் பார்க்க முடிந்தது. ஏட்ரியனின் உதவியை எதிர்பார்க்காமல் அந்த வாசலின் கதவைக் கையை வைத்து மேலே தள்ளினேன். முதலில் எளிதாக இருந்தாலும் அதன் பாரம் என்னைத் திருப்பித் தாக்கியது. ஏட்ரியன் வந்து அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். மிக எளிதாக அதைத் தூக்கித் திறந்து வழியை ஏற்படுத்திக் கொடுத்தான். அவன் சீருடைக்குள் மறைத்து வைத்திருக்கும் அவனது செதுக்கப்பட்ட ஜிம் உடலைப் பற்றி என் மனம் கற்பனை செய்தது, அந்த எண்ணத்தை உடனடியாகத் துடைத்துப் போட்டுவிட்டு நேற்று இரவு எனக்கு வந்த முட்டாள்த்தனமான யோசனையை நினைத்து சிரித்துக் கொண்டேன்.

இருட்டுக்குள் வேகமாக இந்த படிகளில் ஏறி வந்திருந்தால், பாதி வழியிலேயே மூச்சு வாங்க, திணறிப்போய் உட்கார்ந்திருப்பேன். அல்லது இந்தக் கதவுடன் மோதிப்பார்த்துவிட்டு மயங்கிப் போயிருப்பேன். திரும்பப் போய் நெருப்புக்கு அருகில் இருக்கும் அவனிடம் போய் இன்னும் பதட்டத்துடன் இருந்திருந்தால் அது எத்தனை அவமானமானதாக இருந்திருக்கும்! நல்ல வேளையாக நான் அவனுடனேயே இருந்துவிட்டேன். அதற்காக நன்றியுணர்வு எனக்குள் ஏற்பட்டது. இனி நாங்கள் பயணம் செய்யும் தூரம் முழுவதும் அவனைப் பற்றியும் அவன் உலகத்தைப் பற்றியும் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும்.

மரங்களுக்குள்ளே தென்றல் நுழைந்து வந்தது. என் தலை முடி கலைந்தது. ஏதோ ஒரு கல்லறைக்குள் இருந்து வெளியே வந்ததுபோல உணர்ந்தேன்.

“இங்க எப்பவுமே இப்படித்தான் இருக்கும். சூரியன் அற்புதமா இருக்கும்… உங்க உலகத்துல ஒரே ஒரு சூரியன்தான இருக்கும்?” அவன் சிரித்துக் கொண்டபோது அவன் அந்தச் சுரங்கத்தின் மூடியைச் செடிகொடிகளை வைத்து மூடின சத்தம் அதற்குப் பின்னணி இசைத்ததுபோல இருந்தது. இந்த அளவுக்கு சூரியனுக்கு அருகில் வானத்தில் இனி வரவே கூடாது என்று நினைத்துக் கொண்டேன். சூரியனின் வெளிச்சம் கண்களைக் கூசச் செய்தது. ஆனால் என் முகத்தை உயர்த்தி சூரியனின் வெளிச்சத்தில் என் முகத்தை நனையச் செய்தேன். என் எலும்புகளை நடுங்கச் செய்து கொண்டிருந்த குளிர் பறந்து போயிருந்தது. இனியும் ஏட்ரியனின் மேல் சட்டை எனக்குத் தேவையிலை என்று தோன்றியது. ஆனாலும் அதை கழற்ற வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

“எங்க உலகத்துல ஒரு சூரியன்தான் உண்டு. ஏன்? இங்க நிறைய சூரியன் இருக்குதோ?” நான் ஆச்சரியமாகக் கேட்ட கேள்வி அவனது இரு புருவங்களையும் நெருங்க வைத்தது. அவன் என் பின்புறமாக வந்து என் தோளின் மேல் கை வைத்தான்.

“எங்களுக்கு ஒரே சூரியனும் ஒரே நிலாவும்தான் உண்டு” ஒரு நடுக்கமான சிரிப்பு என் வயிற்றுக்குள் இருந்து வெளிவந்தது.

“உண்மையிலேயே? அப்படின்னா உங்க உலகத்துல ராத்திரி ரொம்ப இருட்டா இருக்குமே?”

“ஆனா உங்க உலகத்து ராத்திரிதான் ரெண்டு நிலா இருந்தும் ரொம்ப இருட்டா இருக்குது.”

“இது உண்மையிலேயே விசித்திரம்தான். நீ என்னோட மேல் சட்டையப் போட்டுருக்கியே சூடா இல்லியா? கழட்டி விடட்டுமா?” என் அருகே வந்தான் அவன்.

எனக்கு சூடாக இருந்தது மட்டுமல்ல, வியர்க்கவும் செய்தது. ஆனாலும் நானாகப் போய் அவனிடம் சரணடைய மனம் இல்லை. நான் அதன் பொத்தான்களைக் கழற்றத் தானாகவே அது பின்புறமாக விழுந்தது. அவன் அதைப் பிடித்துக் கொண்டான். என் இரவு உடையையும் கழற்ற, என் டீ ஷர்ட் அதிக அழுக்கு இல்லாமல் இருந்தது. தோளில் காயம் இருந்த இடத்தில் மட்டும் சிறிது சிவப்பாக இரத்தக் கறை இருந்தது. ஆனால் அந்த டீ ஷர்ட் என் இரவு உடையை விட நன்றாகத்தான் இருந்தது. தன் கையில் அவனுடைய தோல் மேல் சட்டையை வைத்துக் கொண்டு எனக்கு முன்புறமாக வந்தான் ஏட்ரியன்.

“நாம போக வேண்டிய தூரம் ரொம்ப இருக்குது. நாம நடந்துட்டே இருக்கலாம். வழியில சாப்பிட்டுக்கலாம், சரியா?” நான் அவன் பின்னால் நடந்தேன். ஆனால் அவன் எடுத்து வைக்கும் அடியில் பாதிதான் என்னால் அடி எடுத்து வைக்க முடிந்தது. எனக்குக் களைப்பாய் இருந்தது. மனதுக்குள் ஆயிரம் கேள்விகள் அவனிடம் கேட்க வேண்டும் என்று சுற்றி வந்தன. திடீரென அவன் கலகலப்பாக உரையாடுகிற ஆளாக மாறிவிட்டான். ஒரு குறுக்கு வழியில் என்னை அழைத்துச் சென்றான். தனக்குத்தானே அவன் பேசிக் கொள்கிறவற்றை என்னால் கேட்க முடியவில்லை. எனக்கு மூச்சு வாங்கியது. எங்கள் இருவருக்கும் இடையிலான தூரம் பெரிதாகிக் கொண்டே இருந்தது. நான் முக்கியமான ஒரு வேலைக்காக காட்டின் ஓரத்தைத் தேடினேன். அவனும் புரிந்து கொண்டவனாக எங்களுக்கு இடையில் பெரும் தூரத்தை உருவாக்கி நடந்து கொண்டே இருந்தான்.

என்னால் களைப்பைத் துரத்தவே முடியவில்லை. வீட்டுக்குப் போய் நிம்மதியாகப் போர்த்திக் கொண்டு தூங்க விரும்பினேன். அருகில் என் பூனை புர்ர்ர் என்று சத்தமிட அந்த சொர்க்கம் போன்ற சூழலை என் உடல் எதிர்பார்த்து ஏங்கியது. வயிறு பசியினால் கடமுடா என்று சத்தமிட்டது. மனது அம்மாவின் டுனா கேசரோலை நோக்கித் திரும்பியது. சாப்பாட்டு மேசையில் மீதமிருந்த அந்த கேக்கைப் பற்றிய எண்ணமும் என் நாவில் நீர் ஊறச் செய்தது. என் இரட்டைத் தம்பிகள் அந்த கேக்கை எட்டி எடுத்துக் கொள்வது போன்ற காட்சி மனதில் தோன்றினாலும், வீட்டுக்குப் போக வேண்டும் என்ற ஏக்கம் என்னைப் பிடித்துக் கொண்டது.

நான் வேகமாக ஏட்ரியனைப் பிடித்துவிடும் ஆசையில் நடந்தேன். இப்போது நாங்கள் நடந்து கொண்டிருந்த தரை சமதளமாகத்தான் இருந்தது. பச்சையான செடிகளுக்கு நடுவில் ஆங்காங்கே பாறைகள் இருந்தன. ஆனால் அதில் வழி கண்டுபிடித்து நடப்பது என்பது சவாலாகத்தான் இருந்தது. என் முட்டியும் கால்களும் பின்னிக் கொண்டதுபோல இருந்தது. என் கையில் இருந்த இரவு உடை கீழே தரையில் விழுந்தது.





என் வாழ்க்கையில் இதுவரை ஒரு சொட்டுகூட சாராயமோ மதுவோ என் வாயில் பட்டதில்லை. ஆனாலும் அது எப்படி இருக்கும் என்ற கற்பனை அனுபவம் எனக்கு இப்போது ஏற்பட்டது. தலை லேசானதுபோல ஒரு உணர்வு, தோளில் இருந்து மேலே என் தலை பறப்பதுபோல இருந்தது.

காடுகள் என் கண்களில் மங்கலாகின. என்னால் கூர்ந்து பார்க்க முடியவில்லை. நான் நின்று என் கண்களை இறுக்கமாக மூடினேன். திறக்கும்போது தெளிவாக இருக்கும் என்ற நம்பிக்கையில் சிறிது நேரம் கண்களை மூடியே வைத்திருந்தேன். என் தலை கட்டுக்கு அடங்காமல் சுற்றியது. வயிறு சத்தமிட ஆரம்பித்தது. என் கால்கள் மரத்துப் போய்விட்டன. என் விருப்பத்தை மீறி நான் கீழே தரையை நோக்கி விழுந்து கொண்டிருந்தேன். நேராக உட்கார நினைத்தும் முடியாமல், கால்கள் பக்கவாட்டில் மடங்கியிருக்க, உட்கார்ந்த நிலையில் என் கைகள் இரண்டும் என் மடியில் இருக்க அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது. எல்லா திசைகளிலும் இருந்து இலைகளும் குச்சிகளுமாக என் மேல் வந்து மோதிக் கொண்டிருந்தன. என் கண்கள் சட்டென திறந்து கொண்டன. என் கைகள் வெளிறிப் போயிருந்தன. கண்களை இறுக்கமாக மூடித் திறந்து பார்த்தேன்.

“ஏட்ரியன் ஹெல்ப் பண்ணு” என் கூச்சல் கூட அதிக முயற்சிக்குப் பின் தான் வாயை விட்டு வெளியே வந்தது.

என் கண்களுக்கு என் கால்களும் கைகளும் ஏதோ மங்கலான ஒரு வரைபடம்போலத் தெரிந்தன. ஏட்ரியன் என் பெயரைக் கூப்பிடுவது மெலிதாக எங்கோ தூரத்தில் இருந்து வருவது போலக் கேட்டது. அவன் என்னை நோக்கி ஓடி வருவது கடைசியாக ஒரு நொடி நேரம் கண்ணுக்குள் உறைந்து போனது. எங்கள் இருவருக்கும் நடுவே குப்பையாக இலைகள் பறந்து கொண்டிருந்தன. என் முடியும் முகத்தை மறைத்து அசைந்தாடிக் கொண்டிருந்தது. “போயிடாதே” என்று அவன் கத்துவது ஊமைப் படம்போலத் தெரிந்தது. அவன் உதடுகளில் தெரிந்த அந்த வார்த்தைகள் என் காதுகளுக்கு வந்து சேரவில்லை. அவன் ஸ்லோ மோஷனில் ஓடி வருவதுபோலத் தெரிந்தது. என் கண்கள் மூட, என் தலை என்னால் சுமக்க முடியாத அளவு கனமாகத் தெரிய, நான் அப்படியே தரையில் விழுந்தேன். என் கண்கள் மீண்டும் திறக்கவே திறக்காது என்ற உணர்வு இருந்தது. என்னை விழுங்கின அந்த இருளுக்குள் நான் தோற்றுப்போய் விழுந்திருந்தேன். அதன் பின் எதுவும் தெரியவில்லை. வெறுமை.

*Editorial Team :* ***Jeswyn, Jesudoss, Prem, Wilbert & Mic Yell***
*Design :* ***Jeba Prakash*** *Pages :* ***30***
***For free PDF*** *copy Please Contact :* **kurutholaimag@gmail.com**
*Facebook :* ***@kurutholai*** *For More Details :* **9442269002**
**எழுத்தாளர்களின் அனுமதியுடன் படைப்புகள் வெளியிடப்படுகின்றன**